11.11.2025

O.S.No. 205/2024

PW1– சுப்பிரமணியன் – த/பெ. ஆறுமுகம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.11.2025

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( பிரதிவாதி தரப்பில்)

10. வழக்கு தபசில் சொத்து எனது தந்தைக்கு பட்டாமூலம் பாத்தியப்பட்டது என கூறுவது தவறு என்றால் சரியல்ல, நான் உரிமை கோரும் சொத்துக்கள் ஆரம்பத்தில் திருமலையம்மாவின் வகையாறவிற்கு தான் பாத்தியப்பட்டிருந்தது, அவர்களிடம்இருந்துதான் எனது தாத்தா கிரையம் வாங்ககியுள்ளார் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே அந்த ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் என் பெயருக்கு மோசடியாக என் தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல.

11. பிரதிவாதி அவர் வீட்டு மேலச்சுவரில் ஏற்படுத்தியுள்ள அமைப்பை மாற்றம் செய்ய உரிமை கோர எனக்கு எந்த சட்ட அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தாவா முடுக்குவழியாக வெள்ளையடிக்கவும், நடந்துபுழங்கவும் சட்டபடியான உரிமை இருந்துவருகிறது என்றால் சரியல்ல. அந்த உரிமைக்கு விரோதமாக நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் சொத்தில் சொல்லியுள்ள அளவுகள், எல்லைகள் தவறானது என்றால் சரியல்ல. எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை (2ம் பிரதிவாதி தரப்பில்)**

1. பிராது தபசில்சொத்து எனது தந்தையின் பூர்வீக சொத்து என கூறியுள்ளேன் என்றாலும், அதன் மூலஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பிராது தபசில் சொத்து எனது தந்தையின் பூர்வீக சொத்து கிடையாது.

2. 1ம் தபசில் சொத்தைபொறுத்து எந்த பரிகாரமும் கேட்காமல் 2,3 தபசில் சொத்துக்களை பொறுத்து கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதில் கிழமேல் 2 அடி அகலம் கொண்ட முடுக்கு என்ற ஒரு இடமே ஸ்தலத்தில் கிடையாது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணுக்கு உட்பிரிவு எதுவும் சொல்லவில்லை என்பதால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 சொத்துக்கான பட்டா வா.சா.ஆ 2 இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டாவில் கண்ட விஸ்தீரணம், அளவுகள் தவறு என்றால் சரியல்ல.

4. பிராது 3ம் தபசில் சொத்து ஸ்தலத்தில் இல்லாததாலும் அதில் 2ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார் என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, அவரை

கேள்வி கேட்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணத்தின்படி ஸ்தலத்தில் சொத்து கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.6,7 மாதிரி வரைபடத்தில் கண்டபடி ஸ்தலத்தில் சொத்து கிடையாது என்றால் சரியல்ல. 3ம் தபசில் சொத்து 2 அடி அகலம் ஸ்தலத்தில் இல்லாததாலும் நான் 2ம் பிரதிவாதியின் மீது கேட்டுள்ள விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தனக்கு உரிமைப்பட்ட சர்வே எண்.152/9ல் தான் வீடுகட்டியுள்ளார் என்பது ஆணையர் அறிக்கையில் துலங்குகிறது என்றாலும் அதற்குவிரோதமாக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. 3ம் தபசில் சொத்து ஆணையர் அறிக்கையில் 2 அடி அகல பொதுமுடுக்கு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி தனது இடத்தில் வீடுகட்டியுள்ளதாலும், அவருக்கு எதிராக நான் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்பதாலும், 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.